இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் - **2024**

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் கணக்கீடு	அமைச்சின் தலையீட்டுடன் அரசாங்க பாதீட்டு ஏற்பாடுகளின் மீது பல கட்டங்களில் கூட்டுத்தாபனத்தின்	கூட்டுத்தாபனத்திற்க சொந்தமான அனைத்து காணிகள் நியாயமான பெறுமதியொன்றிற்கு

	செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 16 தோட்டங்களில் 15 தோட்டங்களுக்குரிய 9,960 ஹெக்டயர் காணியின் பெறுமதியை கணித்து சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிருவாகத்தின் கீழ் காணப்படும் தோட்டங்களை நில அளவை செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அதன்படி காணிகளின் பெறுமதி தொடர்பாக கருத்தொன்று பெற்றுக்கொள்வதற்காக அரச பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வழங்கும் படி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டப்பட்டது. 2025 மே 15 திகதிய கடிதத்தின் மூலம் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டப்பட்டு இந்த தோட்டங்கள் அரச தோட்டங்கள் என கணிக்கப்படுவதால் சலுகை கட்டணம் ஒன்றின் கீழ் பெறுமதி மதிப்பீடு செய்யும் இயலுமையை கண்டறியும் படி வேண்டுதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பந்தி 55 இன் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தில் இருந்து பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டிய போதிலும், கோமர தேயிலைத் தொழிற்சாலைக்காக கொள்வனவு செய்திருந்த வர்ணப் பிரிப்பு இயந்திரம் (Colour Separate) 2023 மார்ச் 28 திகதி முதல் உற்பத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், இயந்திரத்திற்காக 2023 திசெம்பர் மாதத்திற்கான பெறுமானத் தேய்வு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆண்டு தொடர்பாக ரூபா 2,169,966 தொகை குறைவாக பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கோமர தேயிலைத் தொழிற்சாலையில் நிறுவுவதற்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த Colour Separate இயந்திரம் பெறுமானத் தேய்வு கழிக்கும் போது கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு 2023 ஆண்டு திசெம்பர் மாதத்திற்காக மாத்திரம் பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டமையால் 2023 ஆண்டிற்காக குறைவாக பெறுமானத் தேய்வு கழிக்கப்படல் தவறுதலாக ஏற்பட்டதொன்றாகும். அதன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு இணங்க சரியாக பெறுமானத் தேய்வு கணித்து அந்தத் தவறினை 2025 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமங்களின் படி பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டும்.
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பந்தி 57 இன் பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன் பகிர்வுக் கணிப்பின் போது ஆயுட் கணிப்பு முறை	கூட்டுத்தாபனத்தின் சேவை நலன்களின் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை கணிப்பதற்காக இலங்கை கணக்கீட்டு நியம	சேவை நலன் ஈடுபாட்டுப் பொறுப்புக் கணிப்பின் போது நியமத்தின் பிரகாரம்

	பயன்படுத்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், ஆயுட் கணிப்பீடு முறை பயன்படுத்தாமையால் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 763,932,645 இற்கான சேவை நலன்கள் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மீதியின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.	இலக்கம் 19 இன் படி ஆயுட் கணிப்பு முறைமை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும், ஆயுட் கணிப்பாளர் (Actuary), ஆயுட் கணிப்பு நிறுவனம் (Actuarial firm) ஒன்றின் சேவையொன்றை பெற்றுக்கொள்ளவதற்கு பாரிய தொகையொன்று செலவிட நேரிடுகின்ற காரணத்தினால் மற்றும் நிலவுகின்ற நிதி நெருக்கடி, அதற்கான பாரிய தொகையொன்று செலவிட முடியாமை காரணத்தினால் அது மேற்கொள்ள முடியாமல் போனது.	ஆயுட் கணிப்பு முறை பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் பந்திகள் 28 இன் படி நிதிசார் விடயங்கள் தீர்க்கும் போது ஏற்படுகின்ற காலப் பகுதியில் இலாபம் அல்லது நட்டத்தினை இனங்காண வேண்டியிருந்த போதிலும், வர்ணப் பிரிப்பு இயந்திரம் (Colour Separate) கொள்வனவு செய்தல் தொடர்பாக ஏற்பட்டிருந்த செலாவணி பெறுமதியின் வித்தியாசத்தின் மீது 2023 ஆண்டின் போது ரூபா 137,618 தொகை மற்றும் 2024 ஆண்டின் போது ரூபா 3,405,805 தொகை நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை.	Colour Separate இயந்திரம் இறக்குமதி தொடர்பாக ஏற்பட்டிருந்த செலாவணி பறிமாற்று இலாபம் (Exchange gain) சரியாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை எமது தவறொன்றாக காணப்படுவதுடன், 2025 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது தேவையான சீராக்கல் மேற்கொண்டு இந்த தவறினை சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி செயற்பட வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பந்திகள் 12 மற்றும் 30 இல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.1.4.2 படி நுகர்வு இனவிருத்திச் சொத்துக்களை ஆரம்ப இனங்காணலின் போது மற்றும் அனைத்து அறிக்கையிடும் காலப் பகுதி ஒன்றின் இறுதியிலும் விற்பனைக்கான செலவுகளை கழித்த பின்னர் நியாயமான பெறுமதிக்கு கணிக்கப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் 14 தோட்டங்கள் பூராகவும் பரவியிருந்த மர அறுவடை செய்யக்கூடிய 104,691 மரங்கள் உட்பட கிராண்டிஸ், அல்பீஸியா, தேக்கு, யுகலிப்டஸ் போன்ற வன பயிர்கள் செய்கைகள் மீளாய்வாண்டு	கூட்டுத்தாபனத்தின் தோட்டத் தொகுதிகளுக்கு சொந்தமாக காணப்படுகின்ற வணிகம் சார் காட்டுப் பயிர்கள் தற்போது பட்டியலிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அந்தக் காட்டுப் பயிர்களின் பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது இந்த பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் ஓபல்கல தோட்டத் தொகுதியில் காணப்படும் காட்டுப் பயிர்களின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்த சந்தர்ப்பம் அளவில் காட்டுப் பயிர்களின்	நிதிக்கூற்றுக்களில் கணக்குக் குறிப்புக்களில் 3.1.4.2 கொண்ட கணக்கீட்டுக் கொள்கையின் படி நுகர்வு இன விருத்திச் சொத்துக்களின் நியாயமான பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதது என வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	இறுதியளவிலும் முறையான பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமல் அல்லது நியாயமான பெறுமதியொன்றுக்கு மதிப்பீடு செய்யாமல் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 3,362,969,544 தொகையென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல் 43 ஆம் பந்தியின் பிரகாரம் இனவிருத்திச் சொத்துக்கள், முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாத பயிர்கள் என வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 முதல் 2024 வரையான காலப்பகுதியில் நடப்பட்டிருந்த 32,820 தொகை பல்வேறு பலகைக்கான மரங்கள் முதிர்வடைந்த அல்லது முதிர்வடையாது என காட்டப்பட்டிருக்கவில்லை.	உண்மையான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்வதற்கு முடியாமல் உள்ளது. இந்த கருமங்கள் முடிவடைந்த பின்னர் விற்பனை செய்த மரங்களின் கிரயம் இருப்புநிலை மீதியில் இருந்து கழித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டுத்தாபனத்தின் பேரேட்டில் மீள் காட்டுப் பயிர்ச் செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவாகிய ரூபா 48,388,411 தொகை இருப்புநிலை காட்டுப்பயிர்ச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், வெட்டுவதற்கு பொருத்தமான நிலைமையில் காணப்படும் மரங்களின் பெறுமதி ரூபா 3,085,476,423 தொகை மற்றும் ரூபா 229,104,709 தொகை நுகர்வு இனவிருத்தி சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு வெவ்வேறாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களில் ஒரு பெறுமதியாக காட்டப்பட்டுள்ளதுடன், இருப்புநிலை காட்டுப் பயிர்ச் செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் இதுவரை முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதது என வேறுபடுத்திக் காட்டப்படவில்லை.	

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு கணிப்பின் படி கட்டிடங்களுக்காக ரூபா 218,769 தொகை பெறுமானத் தேய்வு மிகையாகவும், உபகரணங்கள், தளபாடங்கள், மோட்டார் வாகனங்கள், கணினிகள் மற்றும் இயந்திரங்களுக்காக ரூபா 1,038,206	நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு கழிக்கும் போது ஏற்பட்டிருந்த வழுவிற்கான காரணம் கூட்டுத்தாபனத்திடம் சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று காணப்படாமையின்	சரியாக பெறுமானத் தேய்வு கணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	தொகை பெறுமானத் தேய்வு குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	காரணத்திலேயாகும். ஆனால், 2025 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரியாக நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு கணித்தல் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதுடன், ஏற்பட்டிருந்த வழுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	
(ஆ)	கோமர தேயிலை தொழிற்சாலையில் 2024 ஜூலை 15 திகதி தேயிலை உலர்த்தும் இயந்திரத்திற்கு மற்றும் கட்டிடத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன், அந்த சேதத்தின் பெறுமதி ரூபா 2,652,300 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், சேதம் தொடர்பாக காப்புறுதியினால் ரூபா 2,200,630 தொகை கிடைத்திருந்தது. அதன்படி, சொத்துக்கள் சேதத்தினால் ரூபா 451,670 தொகை நட்டமொன்று இனங்காணப்பட்டிருந்தது. சொத்துக்கள் அகற்றுவது தொடர்பாக மொத்த நட்டம் ரூபா 45,386 தொகையாக காணப்பட்ட போதிலும், சொத்துக்கள் அகற்றுவதில் நட்டம் ரூபா 451,670 தொகை என காட்டப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் இலாபம் ரூபா 406,284 இனால் குறைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது.	கோமர தொழிற்சாலையின் தேயிலை உலர்த்தும் இயந்திரத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை சரியாக கணிக்கப்பட்டிருக்காததுடன், எம்மால் சேதம் என கணிக்கப்பட்டது. தீயினால் ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,652,300 தொகை மற்றும் கிடைத்திருந்த காப்புறுதித் தொகை ரூபா 2,200,630 தொகைக்கு இடைப்பட்ட வித்தியாசமான ரூபா 451,670 தொகையாகும். இந்த நட்டத்தை கணிக்கும் போது ஏற்பட்டிருந்த வழு 2025 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல், இந்த சேதமடைந்த இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு கணிப்பின் வழுவும் 2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நட்டம் சரியாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	2024 ஆண்டின் போது வலகந்துவ தோட்டத் தொகுதியில் 1007 இறப்பர் மரங்கள் டென்டர் அழைக்கப்பட்டு ரூபா 3,791,359 இற்கான விலையொன்றுக்கு விற்பனை செய்திருந்த போதிலும், அதன் கிரயம் இருப்புநிலை மீதியிலிருந்து கழிக்கப்பட்டிருக்காமையால், சொத்துக்கள் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	வலகந்துவ தோட்டத்தில் காணப்படும் இறப்பர் மரங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதி 2000 ஆண்டு முதல் காணப்படுகின்ற பழைய மீதியாகும். மேலும், இவ்வாறு வெட்டி அகற்றப்பட்டிருந்த இறப்பர் மரங்கள் 30 வருடங்களை விட பழமையானவையாகும். அந்த மரங்கள் தொடர்பாக அந்தத் தோட்டத்தில் சரியான தரவுகள் காணப்படாத காரணத்தினால் வெட்டி அகற்றப்பட்ட இறப்பர்	இருப்பு நிலை சொத்துக்களின் கிரயம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

		மரங்களின் கிரயம் சரியாக இனங்கண்டு இருப்புநிலை மீதியிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது.	
(ஈ)	மீளாய்வாண்டின் போது மரங்கள் விற்பனையின் மூலம் ரூபா 141,951,100 இற்கான வருமானம் ஒன்று உழைத்திருந்த போதிலும், அதன் கிரயத்தை இனங்கண்டு ஆண்டிற்கான நுகர்வு இருப்புநிலை மீதியிலிருந்து கழிக்கப்பட்டிருக்காமையால், நுகர்வு இருப்புநிலை மீதி மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டின் போது மரம் விற்பனையின் மூலம் ரூபா 141,951,100 இற்கான வருமானம் ஒன்று உழைத்திருந்த போதும் அந்த மரங்களுக்கான கிரயம் கூட்டுத்தானத்தின் நுகர்வு இருப்புநிலை மீதியின் கீழ் கழித்துக் காட்டுவதற்கு முடியாமல் போனமை தோட்டத் தொகுதிகளில் சரியான தகவல்கள் காணப்படாமையாகும்.	நுகர்வு இருப்புநிலைச் சொத்துக்களின் நியாயமான பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் பணிக்கொடை ஒதுக்க மீதி மற்றும் ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை செலவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் வெவ்வேறாக சீராக்கப்பட்டிருந்ததுடன், செலுத்த வேண்டிய பணிக்கொடை பெறுமதியில் கடந்த ஆண்டின் மீதியுடன் வித்தியாசமான ரூபா 41,025,510 இற்கான வித்தியாசம் தொழிற்படு மூலதனத்தின் மாற்றங்களினூடாக சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.	எங்களால் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரி செய்யப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டதென்பது எனது நம்பிக்கையாகும். எனினும், எமது கணக்கீடில் குறைகள் ஏதும் காணப்படின் அதனை நிவர்த்தி செய்வதற்கு அறிவுரை வழங்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.	காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும்.

(ஊ)	கூட்டுத்தாபனத்தின் 2024 ஆண்டிற்கான குத்தகை வருமானம் ரூபா 1,252,504 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த எண்ணிக்கையினால் கூட்டுத்தாபனத்தின் இலாபம் குறைவடைந்திருந்ததுடன், கிடைக்க வேண்டிய குத்தகை வருமானமும் அந்த எண்ணிக்கையினால் குறைவடைந்திருந்தது.	காணிப் பிரிவிலிருந்து நிதிப் பிரிவிற்கு வழங்கப்படுகின்ற தகவல்களின் படி நிதிப் பிரிவினால் பெற வேண்டிய குத்தகை வருமானத்திற்காக இன்வொயிஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டு கணக்கீடு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், குத்தகைக்கு கொடுத்துள்ள ஆதனங்களில் இருந்து பெற வேண்டிய குத்தகை வருமானம் தொடர்பாக அரச கணக்குப் பிரிவிற்கு காணிப் பிரிவினால் 2024 ஒக்தோபர் 03 திகதி வழங்கியிருந்த பதிவேட்டில் வழுக்கல் காணப்பட்டமையால் மீண்டும் அதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	குத்தகை வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தோட்டத் தொகுதியல் வர்த்தக மற்றும் கடன்பட்டோர் மீதியில் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டங்கள் இடையே, பிரதேச அலுவலகங்கள் மற்றும் தோட்டங்கள் இடையே மற்றும் தோட்டத் தொகுதியிடையே பண்டப் பரிமாற்றங்கள் மேற்கொள்வதற்காக பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் ஒன்றிற்கு ஒன்று சமப்படுத்தப்படாத ரூபா 166,412,556 இற்கான மீதியொன்று காணப்பட்டது. அதில் ஒரு வருடத்தை மிகைத்துள்ள ரூபா 7,963,019,263 தொகைக்கான வரவு மீதியொன்றும் மற்றும் ரூபா 7,525,771,264 தொகைக்கான செலவு மீதியொன்றும் காணப்பட்டது. தோட்டங்களுக்கிடையான நடைமுறைக் கணக்கில் (Estate C/A Balance) வரவு மீதியில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான தோட்டத் தொகுதிகளுக்கிடையில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யும் போது தேவையான நாட்குறிப்புப் பதிவுகள் உட்படுத்தப்பட்டிருக்காமையால் மீதியான ரூபா 1,681,780,263 இற்கான மீதியொன்று காணப்பட்டது. அதனை இதுவரை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தோட்டத் தொகுதிகள் இடையே வர்த்தக மற்றும் கடன்பட்டோர் மீதிகளில் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகள் இடையேயும் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தோட்டத் தொகுதிகள் இடையேயும் ஏற்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கின் ஒன்றிற்கு ஒன்று சமப்படாத மீதிகள் இடையே (2024.12.31 திகதியில் உள்ளவாறு ரூபா 166,412,556 தொகை) அனேகமான எண்ணிக்கை காணப்படுவது பழைய சமப்படுத்தப்படாத மீதிகளாகும். இவற்றிற்கிடையே 2019 மற்றும் 2020 ஆண்டுகள் தொடர்பாக காணப்படுகின்ற ரூபா 1,681,780,263 இற்கான மீதியில் ஒரு எண்ணிக்கை தொடர்பாக தொடர்ந்தும் கண்டறிந்து அவற்றிற்கான நாட்குறிப்புப் பதிவுகள் பதியப்பட்டு அந்த சமப்படுத்தப்படாத மீதிகளை குறைப்பதற்கு 2025 ஆண்டின் போது நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	நடைமுறைக் கணக்கு மீதிகள் சரியாக சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

விடயம்	நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி ரூபா	நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி ரூபா	வித்தியாசம் ரூபா	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	504,307,691	380,289,813	124,017,878	இந்த வித்தியாசத்திற்கான காரணம் நீண்ட காலமாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று கூட்டுத்தாபனத்திடம் காணப்படாமையே. வரிசையமைச்சின் ஒத்துழைப்புடன் முழுமையான சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு தற்போது கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் முதல் கட்டமாக கெலோபொக்க தோட்டத் தொகுதியில் நிலையான சொத்துக்கள் (தளபாடங்கள். உபகரணங்கள், கணினி இயந்திரங்கள்) பட்டியலிடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்தல் அலுவல்கள் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினாலே மேற்கொள்ளப்பட்டமையால் நாளாந்த கடமைகளுக்கு மேலதிகமாக இந்த அலுவல்களிலும் ஈடுபட்டிருந்தமையால் அவர்களின் இந்த அலுவல்களை பூர்த்தி செய்ய முடியாமல் போனது.	சொத்துக்களின் வித்தியாசம் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு சரி செய்ய வேண்டியதுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
திருப்பிச் செலுத்த வேண்டிய	28,751,363	செலுத்த வேண்டிய வைப்புத்தாரர்களின்	திருப்பிச் செலுத்த வேண்டிய	திருப்பிச் செலுத்தப்பட

வைப்புக்கள்	பதிவேடுகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள்	வைப்புக்களுக்காக எம்மால் பணம் செலுத்தப்படுவது குறிப்பிட்ட நபர்கள் அந்தப் பணத்தை செலுத்தும் படி வேண்டுகோள் விடுத்த பின்னர் அவர்களிடம் காணப்படும் பற்றுச்சீட்டை பரிசோதனை செய்த பின்னரே ஆகும். திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய தனிப்பட்ட பதிவேடொன்று / பட்டியலொன்று பேணிச் சென்றிருக்காத போதிலும், அவை அந்த விபரங்கள் பேரேட்டில் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் யாருக்கு செலுத்தப்பட வேண்டும் என உட்பட ஏனைய தகவல்கள் பேரேட்டில் இருந்து பெற்றுக்கொண்டு பட்டியலொன்று தயாரிப்பதற்கு நீண்ட காலமொன்று செல்கின்றது. எனினும், பெறுகைப் பிரிவினால் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக தகவல்களை பதிவு செய்வதற்காக தனியாக பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	வேண்டிய வைப்புப் பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தலைமை அலுவலகத்தில் மற்றும் தோட்டங்களில் ரூபா 348,085,497 தொகைக்கான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் 05 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 58,872,707 இற்கான மீதியை அறவீடு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்ததென அவதானிக்கப்பட்டது.	கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளின் மீதி அடங்கியுள்ள பிரதான விடயம் ஒன்று மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிலிருந்து எமது கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 42,739,676 தொகையாகும். இந்த நிறுவனத்திற்கு கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய ரூபா 97,709,346 மில்லியன் தொகை காணப்படுகின்றமையால் கூட்டுத்தாபனத்தினால் ஜனவசம இற்கு ரூபா 54,696,666 இற்கான தொகையொன்று செலுத்த வேண்டியிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், நிறுவனத்திற்கு ஜனவசம இலிருந்து பெற வேண்டிய மீதிக்கான 2012 ஆண்டின் போது ஐயக்கடன் ஒதுக்கத் தொகையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய கடன் தொகைகளும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நீண்ட காலமாக பெறவேண்டிய மீதிகளை தீர்த்துக்கொள்வதற்காக போதியளவு நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியாகிய ரூபா 479,620,080 தொகை 05 வருடங்களை விட பழமையான ரூபா 253,147,140 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், அதில் 12 வருடங்களுக்கு முன்னர் இருந்து	இந்த 12 வருடங்களை விட பழமையான மீதிகள் தொடர்பாக எங்களினால் கடனை பதிவழிப்பதற்காக நிறுவனங்களிடம் வினவிய போதிலும், அதற்காக இணங்கியிருக்கவில்லை. 01. சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி - ரூபா 42,810,959	செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் வட்டிகளை தீர்த்துக்கொள்ள விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காணப்படுகின்ற ரூபா 219,546,538 இற்கான மீதியொன்று காணப்பட்டது. அதில் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதியில் 46 சதவீதம் ஆகும்.

02. இலங்கை மினரல் சேன்ட் கம்பனி - ரூபா 25 மில்லியன்
03. இலங்கை உரக் கம்பனி - ரூபா 35.93 மில்லியன்
04. மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை - ரூபா 97,709,346
05. அரச வளங்கல் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் - ரூபா 28,709,029

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு		இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவுகள் 15 மற்றும் 16	2000 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 695,690,845 இற்கான ஊழியர் சேமலாப நிதியம் மீளாய்வாண்டு இறுதியளவிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன், அதன் மீது செலுத்த வேண்டிய மிகை விதிப்பு 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 85,854,420 தொகையாக காணப்பட்டது. மேற்கூறிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்யாத தோட்ட ஊழியர்கள், தோட்ட பதவியணியினர் சேமலாப நிதியம் (ESPS) இற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 89,799,721 தொகையும், தோட்ட முகாமைத்துவம் இலங்கை பயிர் செய்கையாளர்களின் சேமலாப சங்கத்திற்கு (CPPS) செலுத்த வேண்டிய தொகை ரூபா 21,984,422 ஆக காணப்பட்டது.	நீண்ட காலமாக கூட்டுத்தாபத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணத்தினால் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகள் (EPF, ETF, ESPS, CPPS, Gratuity) கொடுப்பனவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை. நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு தொடர்பாக 2025 ஆண்டு மார்ச் மாதம் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரை வழங்குவதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்தப் பரிந்துரையின் படி அமைச்சரவையினால் செலுத்த வேண்டிய நியதிச் சட்ட கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் வழங்கப்படின் முழுமையாக நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன்.	நிலுவை பங்களிப்புத் தொகை தொடர்பான சிக்கலை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பகுதி 2 பந்தி 16(1)	2000 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 47,537,485 தொகையாக காணப்பட்டதுடன், அதன் மீது செலுத்த வேண்டிய மிகை விதிப்புத் தொகை ரூபா 10,425,561 தொகையாகும்.	நீண்ட காலமாக கூட்டுத்தாபத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணத்தினால் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகள் (EPF, ETF, ESPS, CPPS, Gratuity) கொடுப்பனவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை. கூட்டுத்தாபனம் உட்பட மூன்று அரச நிறுவனங்களின் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு தொடர்பாக 2025 மார்ச் மாதம் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	நிலுவை பங்களிப்புத் தொகை தொடர்பான சிக்கலை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பகுதி II பிரிவு 5(1)	2010 முதல் 2024 ஆண்டு வரை தோட்ட ஊழியர்களுக்காக ரூபா 583,316,046 தொகையும், தலைமை அலுவலக ஊழியர்களுக்கு ரூபா 4,911,149 தொகையுமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த பணிக்கொடைத் தொகை ரூபா 588,227,195 தொகையாக காணப்பட்டதுடன், அதன்மீது செலுத்த வேண்டிய மிகை விதிப்புத் தொகை ரூபா 27,777,163 தொகையாக காணப்பட்டது.	நீண்ட காலமாக கூட்டுத்தாபத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணத்தினால் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகள் (EPF, ETF, ESPS, CPPS, Gratuity) கொடுப்பனவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை. கூட்டுத்தாபனம் உட்பட மூன்று அரச நிறுவனங்களின் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு தொடர்பாக 2025 மார்ச் மாதம் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 18(1) மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார	அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 2018 ஆண்டு முதல் இன்வொயிஸ் சமர்ப்பிக்கப்பட்ட 06 வருடங்களுக்குரிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 6,585,858 தொகையும்,	2017, 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. 2021	கணக்காய்வுக் கட்டணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	சட்டத்தின் பிரிவு 13(2)	1998 முதல் 2017 ஆண்டு வரையான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 6,393,289 தொகை செலுத்தியிருக்கவில்லை.	மற்றும் 2022 ஆண்டுகளுக்குரிய கணக்காய்வுக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அங்கு பணிப்பாளர் சபைத் தீர்மானமானது நிறுவனத்தில் நிலவுகின்ற நிதி நெருக்கடி காரணமாக இந்த கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடாது என்பதாகும். அதன் காரணமாக கணக்காய்வு கட்டணம் கொடுப்பனவு தொடர்பாக மீண்டும் ஒருமுறை பணிப்பாளர் சபையின் அறிவுரை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.	
(உ)	2018 மார்ச் 19 திகதிய 2018/01 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 2 (அ) மற்றும் 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 02	நிறுவனத்திற்கு சொந்தமான 122 வாகனங்களில் 74 உம் அதாவது 61 சதவீதம் ஓட்ட நிலையில் காணப்படாததுடன், அவற்றில் கூடிய எண்ணிக்கையொன்று 08 – 14 வருடங்களுக்கும் முன்னர் இருந்து ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களாகும். 2024 இல் நடைபெற்ற அரச தொழில் முயற்சிகள் குழுவின் மூலம் வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும். 2025 மே 31 திகதி வரை அந்த வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எமது நிறுவனத்திற்கு சொந்தமான 74 வாகனங்கள் அப்புறப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்புறப்படுத்துவதற்கு பொருத்தமான வாகனங்களை இனங்காணும் விஷேட கணிப்பீட்டு சபை மற்றும் இனங்காணப்பட்ட வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக மாவட்ட ரீதியில் சபைகள் / குழுக்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிராகரம் ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 756 (2)(ஆ)	பண்டக் கணிப்பீட்டு சபை தொடர்பாக பண்டங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் அல்லது நெருங்கிய உத்தியோகத்தர் நியமனம் செய்ய முடியாத போதிலும் தோட்டத் தொகுதிகளில் பண்டக் கணிப்பீட்டு சபைகளுக்காக குறிப்பிட்ட தோட்டங்களின் தோட்ட அத்தியட்சகர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. பண்டக் கணிப்பீட்டு சபையினால் பண்டங்கள் பௌதீக ரீதியாக பரிசோதனை மேற்கொள்ளாமல் முன்னைய ஆண்டின் கணிப்பீட்டு அறிக்கையின் பிரதியொன்று பெற்றுக்கொண்டு கையொப்பமிடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.	பண்டக் கணிப்பீட்டு சபையின் பண்டங்களை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்தவற்கு சம்பிரதாய முறைப்படி பெருந்தோட்டத் துறையில் தோட்ட தொகுதிகளில் குறிப்பிட்ட தோட்ட அத்தியட்சகர் மற்றும் ஏனைய இரண்டு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படுகின்ற செய்முறையாகும். இது அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் தோட்டத் தொகுதிகளில் கடந்த 50 வருடங்களாக மேற்கொள்ளப்படுகின்ற செய்முறையொன்றாகும். இதற்கு மாற்றமான முறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டுமெனின் அதற்காக அறிவுரை வழங்கப்பட்டு சுற்றறிக்கையொன்று அனுப்பப்பட வேண்டும்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 68,640,456 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 92,673,903 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப ரூபா 24,033,447 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் ஏனைய வருமானங்கள் ரூபா 57,442,896 இனால் அதிகரித்தல் மற்றும் நிருவாகச் செலவு மற்றும் நிதிச் செலவு முறையே ரூபா 29,840,866 தொகையினால் மற்றும் ரூபா 13,174,092 தொகையினால் குறைவடைதலும் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமான விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் வருமானங்கள் மற்றும் செலவு விடயங்கள் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்து கீழே காட்டப்பட்டுள்ளது.

	2024 (ரூபா)	2023 (ரூபா)	முரண்கள் (ரூபா)	முரணின் சதவீதம் %
வருவாய்	991,042,009	1,012,615,844	(21,573,835)	(2)
ஏனைய வருமானங்கள்	192,316,491	135,743,884	56,572,607	42
விற்பனவுக் கிரயம்	969,188,394	915,210,110	53,978,284	6
நிருவாகச் செலவு	222,934,082	252,774,948	(29,840,866)	(12)
நிதிச் செலவுகள்	59,876,479	73,048,571	(13,172,092)	(18)

2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் முறையே 0.24:1 தொகை மற்றும் 0.17:1 தொகையாக காணப்பட்டதுடன், திடீர் சொத்துக்கள் விகிதாசாரம் முறையே 0.19:1 மற்றும் 0.13:1 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 2,178,669,294 தொகை மற்றும் ரூபா 2,156,877,357 தொகையாக காணப்பட்டு நடைமுறை பொறுப்புக்களின் பெறுமதி அதிகரித்திருத்தல், நடைமுறை சொத்துகள் மற்றும் திடீர் சொத்துகள் விகிதாசாரங்களில் பின்னடைவிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

(ஆ) 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது மொத்த இலாப விகிதாசாரம் முறையே 10 சதவீதம் மற்றும் 2.2 சதவீதமாக காணப்பட்டதுடன், 2023 ஆண்டில் காணப்பட்ட 9.2 சதவீதத்திற்கான தேறிய நட்ட விதிதாசாரம் மீளாய்வாண்டின் போது 6.93 சதவீதத்திற்கான தேறிய நட்ட சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கூட்டுத்தாபனத்தின் பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம் மற்றும் மனிதவள) பதவிக்காக வெளி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பதற்கு அடிப்படை கல்வித் தகைமை பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கெர்ளப்படுகின்ற பல்கலைக் கழகம் ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளம் / வணிக நிருவாகம் / வணிகக் கல்வி / வணிக முகாமைத்துவம் / பொது நிருவாகம் / முகாமைத்துவம் /	மனித வளம் தொடர்பான வணிக நிருவாக ஆரம்ப பட்டம் (BBA in HRM) 2010 ஆண்டின் போது இந்தியாவின் ஜவகர்லால் சர்வதேச ஆய்வு நிறுவனத்தின் மூலம் பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டச் சான்றிதழ்களில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் மெய்மையாயப்பட்ட பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன்,	பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம் மற்றும் மனிதவள) பதவிக்காக எதிர்பார்க்கும் தகைமை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட வேண்டும்.

	வாணிபம் / அரச பொது முகாமைத்துவம் தொடர்பான முதன்மை பட்டமொன்றுடன் குறிப்பிட்ட துறையில் பட்டப் பின் படிப்பொன்று வேண்டப்பட்டிருந்த போதிலும், பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆரம்ப பட்டமின்றிய ஓய்வூபெற்ற விமானப்படை உத்தியோகத்தர் ஒருவர் பிரதி பொது முகாமையாளர் (நிருவாக மற்றும் மனிதவளம்) பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தது.	அவர் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் படிப்பு (Pg Dip in Def. Mgt) 2015 ஆண்டில் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் மூலமும் மனிதவள முகாமைத்துவ மூலம் பட்டப் பின்படிப்பு (Pg. Dip. in HRM) 2016 ஆண்டில் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மூலம் 2017 ஆண்டின் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக வணிக நிருவாக முதுமானி (MBA in HRM) இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மூலமும் பூர்த்தி செய்திருந்தது.	
(ஆ)	இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் தோட்ட பதவியணியிற்காக 30 உத்தியோகத்தர்கள் 2024 மே 05 திகதி முதல் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் தோட்ட ஊழியர் தொழிற்சங்கத்துடனான 2022 ஒக்தோபர் 01 திகதி முதல் 2025 செப்தம்பர் 30 திகதி வரையான 03 வருட கால கூட்டு உடன்படிக்கையின் படி (Collective Agreement) தோட்ட பதவியணியினரின் சம்பளம் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், தோட்டப் பதவியணியிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 30 பேர்களில் 15 பேருக்கு கூட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட சம்பளத்தை விட கூடிய சம்பளம் ஒன்று தீர்மானிக்கப்பட்டு 2024 மே முதல் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக குறிப்பிட்ட சம்பளத்தை விட மிகையாக ரூபா 256,375 தொகை ஒரு மாதத்திற்கு மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது.	தோட்டப் பதவியணியின் நிருவாகம் மற்றும் செயற்பாட்டு அலுவல்களுக்காக தேவையான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளின் எண்ணிக்கை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையும், வெற்றிடமாக காணப்படும் ஊழியர்கள் மாத்திரம் செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டு தகைமையுடைய நேர்முகப் பரீட்சை குழுவொன்று ஊடாக உரிய செய்முறையின் படி உரிய தகைமை மற்றும் அனுபவம் உடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் சேர்த்தப்பட்டிருந்தது. பல்வேறு பதவிகளுக்காக உத்தியோகத்தர் 15 பேர் ஆட்சேர்க்கும் போது நேரொப்ப குறைந்த சம்பளமொன்று கூட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்தத் துறையில் தொழிலுக்காக காணப்படுகின்ற கூடிய சந்தை கேள்வியின் காரணமாக பொருத்தமான சம்பள மட்டமொன்று	கூட்டு உடன்படிக்கையின் படி தோட்ட பதவியணியினர் சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

வைக்கப்படாவிடின் மேற்கூறிய தொழிலுக்காக தகைமையுடைய மற்றும் துறையில் அனுபவமுள்ள விண்ணப்பதாரிகள் எவரும் சேர்த்துக்கொள்ள முடியாத நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக நிருவாக உத்தியோகத்தர், உதவி கள உத்தியோகத்தர், தொழில்சாலை உத்தியோகத்தர், கள உத்தியோகத்தர், கனிஷ்ட தோட்ட மருத்துவ உத்தியோகத்தர், சிரேஷ்ட உதவி தொழிற்சாலை உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்காக தலைமையுடைய துறையில் அனுபவமுடைய விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அவர்களின் துறையின் அனுபவம், தகைமைகள் மற்றும் அந்த துறையில் பெற்றுக்கொண்ட சம்பள விடயங்களை கவனம் செலுத்தி நேர்முகப் பரீட்சை சபையின் பரிந்துரையின் படி அவர்களை பொருத்தமான சம்பள மட்டத்தில் நிறுவி சேவையின் தேவைப்பாட்டினை கவனம் செலுத்தி ஆட்சேர்ப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது.

(இ) கள உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பான 2024 பெப்ரவரி 13 திகதிய செய்தித்தாள் அறிவித்தலின் படி கள உத்தியோகத்தருக்கு இருக்க வேண்டிய அனுபவம் என பிரதேச தோட்டக் கம்பனி ஒன்றில் அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டத் தொகுதியொன்று உதவிக் கள உத்தியோகத்தர் பதவியொன்று மூன்று வருடங்களுக்கு மிகையான அனுபவம் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 மே 20 திகதி நியமனம் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வலகந்துவ அரச தோட்டத் தொகுதியல் அங்கீகாரம் இன்றி காணிகளை பிடித்துக்கொள்ளல் தீவிரமாக அதிகரித்து, தோட்ட அத்தியட்சகருக்கு மற்றும் பதவியணியினருக்கு ஏற்பட்டிருந்த மரண அச்சுருத்தல் காரணமாக அந்த தோட்டத்தின் நிருவாகம் நிறுவனத்திலிருந்து கைநழுவி குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைமையின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

	வழங்கியிருந்த 06 பேர்களில் 04 பேர்களும் பாதுகாப்புச் சேவை (இலங்கை விமானப்படை) இல் ஈடுபட்டு ஓய்வுபெற்றவர்களாக காணப்பட்டதுடன், அவர்கள் மேற்கூறிய அனுபவத்தை பெற்றிருக்கவில்லை.	சென்றிருந்தமையால் அந்த தோட்டத் தொகுதியில் காணிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான நிலைமை மீது தோட்டத் தொகுதியின் நிருவாகத்தை நிறுவுவதற்காக ஒரே மாற்று வழியென ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து கள கடமைகளில் ஈடுபடுத்தி தோட்ட பதவியணியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நிறுவாகத்தை பழைய நிலைமைக்கு ஆக்குவதற்காக உயர் முகாமைத்துவத்தினால் போலவே பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.	

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதனம் ரூபா 1,655,781,536 இற்கான மறைப் பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. அதேபோல், ரூபா 2,181,121,788 இற்கான நடைமுறைப் பொறுப்புக்களில் கூட்டுத்தொகை ரூபா 1,443,249,668 இற்கான நீண்ட காலமாக செலுத்த வேண்டிய நியதிச் சட்ட கொடுப்பனவு மீதியொன்றும் ரூபா 221,977,368 இற்கான வங்கிக் கடனொன்று மற்றும் ரூபா 2,452,494 இற்கான வங்கி மேலதிகப்பற்றொன்று காணப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்தின் குறை தொழிற்படு மூலதனச் சிக்கலொன்றிற்கு முகங்கொடுத்திருக்கின்றதென அவதானிக்கப்பட்டது.	நிறுவனத்தில் நீண்ட காலமாக காணப்படும் நிதி நெருக்கடியின் மத்தியில் ஊழியர் நியதிச் சட்ட கொடுப்பனவு உட்பட நீண்ட காலம் மற்றும் குறுகிய கால பாரிய எண்ணிக்கையான பொறுப்புக்களை செலுத்த முடியாமல் உள்ளது. கூட்டுத்தாபனத்தில் நிலவிய நிதி நெருக்கடி காரணத்தினால் கடந்த பல வருடங்கள் குறிப்பிட்ட நேரத்தில் தோட்ட தொகுதிகளுக்கு தேவையான உரம் போடுவதற்கு முடியாமையால், தேயிலை கொழுந்து விளைச்சல் குறைவடைதல், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 2021 முதல் 2024 ஆண்டளவில் சுமார் 35% எண்ணிக்கையினால் அதிகரித்தல் போன்ற காரணங்கள் கூட்டுத்தாபனங்கள் நிதி நெருக்கடியொன்று	செலுத்த வேண்டிய நீண்ட கால மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		ஏற்படுத்துவதற்கு பிரதான காரணமாக இருந்தது. இந்த சீரற்ற நிலைமையை தவிர்த்துக்கொண்டு கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக தோட்ட தொகுதிகளுக்கு தேவையான உரம் வழங்குவதற்கு தற்போது முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர் காலத்தில் தேயிலை விளைச்சலை அதிகரிப்பதற்கு முடியுமா என எதிர்பார்க்கப்படுகின்றது.	
(ஆ)	கெலேபொக்க தோட்டத் தொகுதியில் இயற்கையாக அமைந்துள்ள 360 பார்வையிடங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வரும் இடமாக காணப்படுவதுடன், முகாமிட்டு தங்குவதற்கும் இயலுமாக உள்ளது. ஒரு வருடத்திற்கு ரூபா 600,000 இற்கு மிகையாக வருமானம் உழைக்கக்கூடிய அந்த இடங்களுக்கு போக்குவரத்து செய்வதற்கு காணப்படுகின்ற சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் பாதை 2024 பெப்ரவரி 29 திகதி அளவில் மிகவும் சேதமடைந்திருந்ததுடன், காட்சி இடங்களை சுற்றி துப்புரவு செய்திருக்கவில்லை. நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்காலிக மறைப்புக்கள் சேதமடைந்து காணப்பட்டதுடன், முகாமிட்டு இரவில் தங்குவதற்காக வருகின்ற சுற்றுலா பிரயாணிகளுக்காக உடலாரோக்கி வசதிகள் காணப்படவில்லை. சுற்றுலா பிரயாணிகளுக்கு தேவையான வசதிகள் குறைவாக இருப்பதால் 2023 ஆண்டு சுமார் ரூபா 663,000 தொகை வருமானம் ஒன்று கிடைத்திருந்த இந்த இடத்தில் 2024 ஆண்டின் வருமானம் ரூபா 424,600 தொகை வரையான அதாவது, 36 சதவீதத்தில் வீழ்ச்சியடைந்திருந்தது.	கெலேபொக்கவில் அமைந்துள்ள 360 பார்வையிடம் அமைந்துள்ளது மலை உச்சியாக காணப்படுவதனால் இயற்கை நீர் ஊற்றுக்கள் மூலம் நீர் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. மேலும், இந்த இடத்தில் மின்சாரம் காணப்படாமையால் நீர் பம்பு ஒன்று பொறுத்துவதற்கு முடியாதுள்ளது. எனினும், இந்த காட்சி நிலையங்களுக்காக வழங்கியிருந்த வசதிகள் எதிர் காலத்தில் அதிகரிப்பதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அந்த இடத்திற்கு நெருங்குவதற்காக 6 கிலோ மீற்றர் தூரப் பாதையை செப்பனிடுவதற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதனை மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காட்சி நிலையங்களுக்காக தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(இ)	ஓபல்கல தோட்டத் தொகுதிக்கு சொந்தமான காட்டு முகாமைத்துவத் திட்டத்தின் படி 2022 விளைச்சல் பெற்றுக்கொள்ள வேண்டிய 300 மரங்களை விற்பனை செய்வதற்காக 2024 ஆண்டில் கூறுவிலை அழைக்கப்பட்டிருந்ததுடன், டென்டர்காரர்கள் விலைகள் சமர்ப்பித்திருந்தது மதிப்பீட்டு விலையை விட ரூபா 2,299,822 தொகை குறைவாகவே. அதற்கான காரணம் என காட்டப்பட்டிருந்தது. மரங்கள் பழமை அடைவதனால் பலகை சார் பெறுமதியுடைய காலம் மிகைத்திருத்தல், பசை உரைந்திருத்தல் ஆகியவை என காட்டப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் இடப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. காட்டு முகாமைத்துவ திட்டத்தின் படி அந்த மரங்கள் 42 வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டவை எனவும், மரத்தின் பெறுமதி பெறக்கூடிய காலத்தில் விற்பனை செய்வதற்கு முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	ஓபல்கல தோட்டத் தொகுதி, நக்கல்ஸ் காப்புக் காடு மற்றும் இடையக மண்டலத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதனால் மரம் வெட்டுவதற்கு அங்கீகாரம் பெறுவதற்கு நீண்ட காலம் கடக்கின்றதெனவும், இந்த தோட்டத் தொகுதி ஏனைய தோட்டங்களிலிருந்து வேறுபட்டு வறண்ட மண்டலத்திற்கு அடங்குவதனால் அது மிகை வெப்பம் மற்றும் காலநிலை தாக்கங்களின் காரணமாக இந்த மரங்களின் உட்பகுதியில் பௌதீக அமைப்புக்கு பாரிய சேதங்கள் ஏற்படுகின்றது (விரிசல்கள் மற்றும் பிளவுகள்) அதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஏனைய தோட்டத் தொகுதிகளில் காணப்படும் மரங்கள் சமமான வயதில் காணப்பட்ட போதிலும், இந்த மரங்கள் பலகை பெறுமதியில் குறைந்திருப்பதற்கு முக்கியமாக காரணமாக இருந்தது.	காட்டு முகாமைத்துவ திட்டத்தின் படி மரங்களின் பலகை பெறுமதி காணப்படும் காலப் பகுதியில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 03/2019 வழிகாட்டலின் பிரகாரம் ஹெக்டயர் ஒன்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட தேயிலை செடிகளின் எண்ணிக்கை 12,500 ஆகும். கொடகங்க அரச தோட்டத் தொகுதியின் அறிக்கையின் படி 221.12 ஹெக்டயர்களில் 1,101,683 தொகை மற்றும் ரங்கல தோட்டத்தின் அறிக்கையின் படி 135.79 ஹெக்டயர்களில் 1,216,089 செடிகளும் காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் நியமத்தின் கொடகங்க தோட்டத் தொகுதியில் காணியின் அளவின் படி 2,764,000 தேயிலைச் செடிகளும், ரங்கல தோட்டத் தொகுதியின் காணியின் அளவின் படி 1,697,375 தொகை காணப்பட வேண்டியிருந்த போதிலும், தற்போது காணப்படுகின்றது கொடகங்க தோட்டத் தொகுதியில்	மத்திய வலயத்தில் காணப்படும் சரிவு நிலைமையின் காரணமாக பொதுவாக 01 ஹெக்டயருக்கு நியம தேயிலை கன்றுகளின் எண்ணிக்கை 12,500 என சரி செய்யப்பட வேண்டும். அதேபோல், கொடகங்க தோட்டத் தொகுதியில் மொத்தமாக ஒரு ஹெக்டயருக்கு காணப்படுகின்ற தேயிலை பற்றைகளின் எண்ணிக்கை 4,982 ஆகும். அனேகமாக 100 வருடங்களை விட பழமையான விதைத் தேயிலை பயிர்ச் செய்கைகளின் தேயிலை பற்றைகள் அழிவடைவதனால் ஏற்படுகின்றது. அதேபோல், ரங்கல தோட்டத் தொகுதியில் விதைத் தேயிலை 01 ஹெக்டயருக்கு காணப்படுகின்ற	ஹெக்டயர் ஒன்றில் காணப்பட வேண்டிய தேயிலை கன்றுகள் எண்ணிக்கை நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	40%, ரங்கல தோட்டத் தொகுதியில் 72% மாத்திரமே. அதன்படி, கொடகங்க மற்றும் ரங்கல தோட்டத் தொகுதிகளின் தேயிலை பயிர்ச்செய்கை செய்யப்பட்டுள்ள காணியில் நியம தேயிலைச் செடிகளின் எண்ணிக்கை காணப்படவில்லை.	பற்றைகளின் எண்ணிக்கை 18% மாத்திரம் காணப்படுவதுடன், ஒட்டுத் தேயிலை 74.26% எண்ணிக்கையொன்று காணப்படுகின்றது. இங்கு விதைத் தேயிலை பயிர்ச் செய்கை பராமரித்தல் செய்முறைசார் இலாபமான நிலைமையொன்று காணப்படாததுடன், அந்த காணிகளில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுரையின் படி தேயிலைப பற்றைகளை அகற்றி மண்ணை வளப்படுத்தி மீண்டும் பயிர் செய்ய வேண்டும். அதேபோல், ஒட்டுத் தேயிலை பயிர் செய்கையில் கத்தரிக்கும் சுற்றில் இறந்துள்ள கன்றுகளுக்காக மீண்டும் கன்றுகள் நடப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது.	
(உ)	தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டல் இலக்கம் 2021/4 படி ஒரு வருடத்திற்கு ஹெக்டயர் ஒன்றிக்கு இட வேண்டிய உர எண்ணிக்கையினை 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது இடப்படாமையினால் தெரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட கொடகங்க மற்றும் ரங்கல தோட்டத் தொகுதிகளில் தேயிலை விளைச்சல் 28 சதவீத்தினால் மற்றும் 35 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.	எமது கூட்டுத்தாபனத்தின் நிதி வலுவின் படி 2020, 2021 ஆண்டுகளின் போது தோட்டத் தொகுதிகளுக்கு உர எண்ணிக்கைகள் வழங்கப்பட்டது. அதற்கு நேரொப்ப கொழுந்து விளைச்சலும் அதிகரித்தது. எவ்வாறாயினும் 2023 ஆண்டின் உரத்தின் விலை ஓரளவு குறைந்த காரணத்தினால் 128,000 கிலோ இற்கு அண்மித்த உர எண்ணிக்கையொன்று இடுவதற்கு இயலுமாக இருந்தது. எனினும், வருமானம் கிடைக்கின்ற தேயிலை துறைகளுக்கான பெறுமானத்தில் 20% எண்ணிக்கையை கொண்டிருந்தது. அதற்கு நேரொப்ப தேயிலை விளைச்சலும் குறைந்திருந்தது.	ஹெக்டயர் ஒன்றிற்கு இடப்பட வேண்டிய உரத்தின் எண்ணிக்கை இடப்பட வேண்டும்.

(ஊ)	தேயிலை மீள் நடுகை செயற்திட்டத்தின் கீழ் கொடகங்க தோட்டத் தொகுதியில் 20.16 ஹெக்டயர்களும் மற்றும் ரங்கல தோட்டத் தொகுதியில் 26.43 ஹெக்டயர்களிலும் முறையே 252,000 கன்றுகள் மற்றும் 330,000 கன்றுகள் நடப்பட்டிருந்தது. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2000 ஜுலையில் வெளியிடப்பட்டிருந்த 00/2 அறிவுரை சுற்றறிக்கையின் படி முதலாம் ஆண்டு கன்றுகளுக்கா ஹெக்டயர் ஒன்றிற்கு 1,100 கிலோ கிராம் உரமும், மற்றும் இரண்டாம் ஆண்டு கன்றுகளுக்காக 1,600 கிலோ கிராம் உரமும் இடப்பட வேண்டியிருந்த போதிலும், கொடகங்க தோட்டத் தொகுதியில் உரத் தேவையின் 39% உம், ரங்கல தோட்டத் தொகுதியில் கன்றுகளுக்காக 6.28% உம் இடப்பட்டிருந்தது.	உரத்தின் விலை பல மடங்குகளாக அதிகரித்திருந்த காரணத்தினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது புதிய பயிர்களுக்காக உரம் போடுதல் மிகவும் குறைந்த மட்டமாக இருந்தது. இங்கு கொடகங்க மற்றும் ரங்கல தோட்டத் தொகுதிகளின் முறையே கன்றுகளுக்காக உரத் தேவைப்பட்டின் 39% சதவீதமும், ரங்கல தோட்டத் தொகுதியின் கன்றுகளுக்காக 6.28% குறைந்த உர எண்ணிக்கையொன்று கூட்டுத்தாபன நிதியை பயன்படுத்தி கொள்வனவு செய்து இடப்பட்டது.	தேயிலை கன்றுகளின் எண்ணிக்கைக்கான தேவையான உர எண்ணிக்கை இடப்பட வேண்டும்.
(எ)	2022 நவம்பர் மாதம் முதல் திருத்த வேலைக்காக மூடப்பட்டிருந்த ரங்கல தோட்டத் தொகுதியில் தேயிலைச் தொழிற்சாலையின் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு தேவையான இயந்திர உபகரணங்கள் உட்பட ஏனைய வசதிகள் வழங்குவதற்கு 2025 ஜனவரி 24 திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது. உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு தேவையான அலுவல்களில் 80% அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், தேயிலை உற்பத்திக்கான தேவையான இயந்திரங்களை வழங்க முடியாமையால் இந்த தாமதம் ஏற்பட்டதென அவதானிக்கப்பட்டது.	2022 ஆண்டில் தேயிலைத் தொழிற்சாலையில் அடுக்குப் பகுதி அனேகமாக சேதமடைந்திருந்தது. அதனூடாக தொழிற்சாலை தீயினால் அழிவடைவதை தடுத்துக் கொள்வதற்காக தொழிற்சாலையின் வேலை உடனடியாக நிறுத்திக்கொள்ளப்பட்டது. இந்தத் தொழிற்சாலை 1984 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை நவீனமயப்படுத்தல் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . அதன்படி, புதிய சந்தைக்கு ஏற்றவாறு தரமான தேயிலை உற்பத்தி செய்வதற்கு வேண்டுமெனில் அதற்கு ஒத்த நிகழ்வாக தொழிற்சாலையாக நவீனமயப்படுத்த வேண்டும் என தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினாலும் யோசனை முன்வைக்கப்பட்டது. தொழிற்சாலையின் மீதியான நவீனப்படுத்தல் வேலை அலுவல்கள் எதிர் காலத்தில் கூட்டுத்தாபனத்தில் நிதிச் சாத்தியக்கூறின் படி கூடிய	விரைவாக வேலைகளை பூர்த்தி செய்து தொழிற்சாலையின் அலுவல்களை ஆரம்பிக்க வேண்டும்.

		விரைவில் பூர்த்தி செய்து தேயிலை உற்பத்தி அலுவல்ளுக்காக பயன்படுத்துவற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	
(ஏ)	2020 முதல் 2021 வரையான காலப் பகுதியினுள் மீண்டும் பலகைசார் மரங்கள் பயிர் செய்யப்பட்ட ரங்கல கல்தூரியா பிரிவின் 2,600 கம்கன்றுகள், யுகடிப்டஸ் 1,732, கெஸியா 250 மற்றும் மதுர மரம் 10 நடுவதற்காக ரூபா 1,065,150 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அந்த கன்றுகள் நடப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.	இந்த விடயங்கள் தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கு கடினமாக இருப்பதற்கு காரணம் அந்த தோட்டத் தொகுதியில் அப்போது தோட்ட அத்தியட்சராக கடமையாற்றி திரு. ஏ.சீ. அபேரத்ன அவர்கள் தற்போது உயிருடன் இல்லை எனவும், உதவி தோட்ட அத்தியட்சகராக கடமையாற்றிய திரு. சீ.ஜே. மாபா அவர்கள் தற்போது இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் சேவையில் காணப்படாமையும் ஆகும். எனினும், தற்போது எம்மால் தகவல்கள் தேடப்பட்டு வருவதுடன், அந்த தகவல்களை பெற்றுக்கொண்ட பின்னர் அரச கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றேன்.	இது தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு செலவிடப்பட்ட தொகையை அறவீடு செய்ய வேண்டும்.
(ஐ)	வலகந்துவ அரச தோட்டத் தொகுதியை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாதிரி தோட்டத் தொகுதியொன்றாக அபிவிருத்தி செய்வதற்கான பயிர் செய்கை செயற்திட்டம் ஒன்று தொடர்பாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த தென்னை, கருவா மற்றும் தேயிலை பயிர்ச் செய்கை தொடர்பாக 2024 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக பரிசோதனையின் போது நடப்பட்டிருந்த 1,551 தென்னை கன்றுகளில் 1,114 கன்றுகள் அதாவது 72 சதவீதமும், நடப்பட்டிருந்த 28,800 கருவா கன்றுகளில் 21,488 அதாவது 75 சதவீதமும், நடப்பட்டிருந்த 27,500 தேயிலைக் கன்றுகளில் 51 சதவீதமும் பயிற்செய்கை வளவில்	வலகந்துவ தோட்டத் தொகுதி மாதிரி தோட்டத் தொகுதியான்றாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் நடைபெற்ற காலத்தில் கடமையாற்றி பதில் தோட்ட அத்தியட்சகர் மற்றும் கள உத்தியோகத்தர்கள் இந்த செயற்திட்டத்தை உரிய முறையில் கண்காணிக்காத காரணத்தினால் பதில் கடமையாற்றிய தோட்ட அத்தியட்சகரின் அந்தப் பதவியில் இருந்து அகற்றி அவரை நிரந்தரப் பதவியாகிய உதவி தோட்ட அத்தியட்சகர் என கெலேபொக்க அரச தோட்டத் தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.	பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காணப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த காலத்தில் கடமையாற்றி பதில் கடமை தோட்ட அத்தியட்சகர் மற்றும் கள உத்தியோகத்தர்கள் உரிய முறையில் கண்காணிப்பு மேற்கொள்ளாத காரணத்தினால் இது ஏற்பட்டிருந்ததென முகாமைத்துவத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்குரிய செலவுகள் அவர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கள உத்தியோகத்தர் இருவரில் ஒருவரின் சேவை தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், அடுத்த கள உத்தியோகத்தர் தற்போது தோட்டத் தொகுதியில் கடமையாற்றுகிறார். இவர்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வாளரின் அறிக்கையின் படி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஒ)	கூட்டுத்தாபனத்திற்கு சொந்த தோட்டத் தொகுதிகளின் நில அளவை அலுவல்கள் மேற்கொள்ளும் போது 06 தோட்டத் தொகுதிகளில் வர்த்தமானியின் மூலம் கிடைக்கப்பெற்ற காணியின் எண்ணிக்கையை விட 1,112 ஹெக்டயர்கள் குறைவாகவும், ஒரு தோட்டத் தொகுதியில் 3.19 ஹெக்டயர் மிகையாகவும் காணப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்த 05 தோட்டங்களை மீண்டும் நில அளவை செய்து சரியான அளவை ஒன்று தரும்படி அமைச்சிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. அதனை சரி செய்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விட கூடிய எண்ணிக்கையொன்று அறிவிக்கப்பட்டுள்ள ஹுன்னஸ்கிரிய தோட்டத் தொகுதியில் காணியின் அளவு வர்த்தமானியில் பிரசுரிக்கும் போது நில அளவை மேற்கொண்டிருக்காமையால் அவ்வாறு குறைந்த பெறுமதியொன்று பதிவு செய்யப்பட்டிருந்ததென நம்புகின்றேன்.	உரித்தான காணியை சரியாக நிலஅளவை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகளுக்கான வழிகாட்டலின் பந்தி இலக்கம் 3.2 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செயற்படு முறைமை ஆரம்ப பதவிகள் தவிர 2024 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தாபனத்தினால் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.	ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செயற்படு முறைமை தொடர்பாக தற்போது ஆரம்பத் தரப் பதவிகளுக்காக மாத்திரம் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய பதவிகளுக்காக அங்கீகாரம் வழங்கப்படவில்லை. எனினும், 2019 இல் காணப்பட்ட அரசாங்கத்தினால் எமது கூட்டுத்தாபனத்தை மறுசீரமைக்கப்படவுள்ளது எனவும். அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன், எமது அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை இரண்டையும் ஒன்றிணைக்கப்படவுள்ளதால் அதன்படி, இந்த அங்கீகாரம் எதிர் காலத்தில் கிடைக்கப்படும் என அறிவிக்கின்றேன்.	ஆட்சேர்ப்பு செய்படுமுறை மைக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள் வதற்கு கூட்டுத்தாபனத் தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.